மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் மற்றும் கிராமங்களுக்கும் உடனடியாக வழங்கவேண்டுமென்பதற்கு சிறப்பு திட்டம் அமைக்கப்பட்டு அது இன்று குடிநீர் வாரியத்தின் மூலமாகவும் நிறைவேற்றப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

திரு. என். கணபதி: இந்தக் குடிநீர் வாரியத்தில் ஆய்வுத் தொகையாக முதலிலே பணம் கட்டச் சொல்கிறார்கள். வசதியில்லாத பேரூராட்சி மன்றங்களும் ஊராட்சிமன்றங்களும் பொதுமக்களிடமிருந்து நிதி வாங்கி செலுத்துவதற்கு அரசு வசதி செய்து தருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொதுமக்களிடமிருந்து வாங்குவதற்கும் அரசாங்கமே வசதி செய்து கொடுக்கும் என்பது இயலாத காரியம்.

*22. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் பேரூராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு, குடிநீர் வடிகால் வாரியம் கிருஷ்ணராயபுரம், பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் ஆகிய பேரூராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை அமுல் படுத்த வேண்டி தனது ஆணை எண். 108, தேதி 28—3—1972-ல் ஆய்வுப் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ22,000-க்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. பேரூராட்சி மன்றங்கள் ஆய்வுக்கான செலவுகளை இன்னும் செலுத்தவில்லை. பேரூராட்சி மன்றங்கள் ஆய்வுக்காகும் செலவுத் தொகையை முழுவதாக செலுத்தியவுடன் ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

வைதீஸ்வரா உயர்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞான கூடம்

*23. வினா—திரு. எம் சுரேந்திரன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூரில் உள்ள வைதிஸவரா தனியார் உயர்நிலைப்பள்ளி விஞ்ஞான கூடம் ஒன்று அமைக்க வேண்டுமென கோரி அரசிற்கு வந்த விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?

1972 டிசம்பர் 4]

மாண்புமி டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1971-72-ம் ஆண்டில் அறிவியல் ஆய்வுக்கூடம் அமைக்க உதவி பெற தகுதியுடைய பட்டியலில் வைதீஸ்வரா தனியார் உயர்நிலைப்பள்ளியினை சேர்க்க வாய்ப்பில்லை.

இவ்வாண்டு மேற்படி திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்க வாய்ப்பு இருந்தால் இப்பள்ளியின் விண்ணப்பம் உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும்.

மாயூரம் கிளை நூலகத்திற்கு கட்டடம்

** 24 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

மாயூரத்தில் உள்ள கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரத்தில் இந்தக் கிளை நூலகத்திற்காக புதிய கட்டடம் கட்டவேண்டி ஒரு இடத்தை ஏற்பாடு செய்து, அந்த இடம் கையகப்படுத்த இயலாத காரணத்தினால், அதாவது காலதாமதம் ஆகின்ற காரணத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. எனவே, இனியும் அதைத் துரிதப்படுத்த அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது பற்றிய நடவடிக்கைகளை மாவட்ட நூலகக் கிளையினர்தான் மேற்கொள்ளுதல் வேண்டும். அவர்கள் எந்த அளவிலே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குறிப்பு அரசிடத்திலே இல்லை. அவர்கள், அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் எவ்வித உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதை மாவட்ட நூலகக் கிளையினர் எழுதி அரசுக்கு அனுப்பினால் அதன் மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே எத்தனை நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலே இயங்குகின்றன என்ற விவரத்தை அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.